இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in | facebook.com/murasoli180 | twitter.com/murasoli180 | instagram.com/murasoli180 | youtube.com/murasoli180 | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 344 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 08 – திங்கள்கிழமை 24 ஜூலை 2023 – கோவை ★★ 12+8 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 81 - Issue 344 : Thiruvalluvar Year - 2054 - Aadi 08 - Monday 24 July 2023 - Kovai ★★ 12+8 Pages ₹ 5.00

## மணிப்பூர் சம்பவம்:

### குக்கி சமூக எம்.எல்.ஏ.க்கள் கோரிக்கை!

மணிப்பூர், ஜூலை 24 -

மணிப்பூரில் உள்ள குக்கி சமூகத்தின் 10 எம்.எல்.ஏ.க்கள் ஒன்றாக இணைந்து கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அதில், மே 4ம் தேதிக்கு பின் இம்பாலில் இரண்டு பெண்கள் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதாகவும்,

லாங்கோல், நகாரியன் பகுதியில் நர்சிங் மாணவிகள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு அடித்து கொலை செய்யப்பட்டதாகவும்,

இம்பாலில் தாய் - மகன் எரித்து கொலை செய்யப்பட்டதாகவும், இம்பால் மைய பகுதியில் மனம் நலம் குன்றிய குக்கி இன பெண் கொடூரமாக கொலை செய்யப்பட்டதாகவும் பல்வேறு அதிர்ச்சி தகவலை குறிப்பிட்டுள்ளனர்.

மே 4ஆம் தேதி மணிப்பூரில் கலவரம் தொடங்கிய நாள் முதல் தற்போது வரை 114 குக்கி இனத்தவர்கள் உயிரிழந்ததாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மணிப்பூரில் அமைதியையும், சமூக நீதியையும் நிலைநாட்ட கருத்து வேறுபாடுகளை தவிர்த்து ஒட்டுமொத்த நாடும் தங்களுக்கு கை கொடுக்க வேண்டும் என குக்கி சமூகத்தின் எம்.எல்.ஏ.க்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

## தமிழ் முகமூடியை போட்டுக்கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றலாம் என்று நினைப்பவர்கள்

# தப்புக் கணக்குப் போடுபவர்கள் ஆவர்!

### முத்தமிழ்ப் பேரவையின் 42 ஆம் ஆண்டு இசை விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, ஜூலை 24 -

**தமிழ் முகமூடியைப் போட்டுக் கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றலாம் என்று நினைப்பவர்கள் தப்புக் கணக்குப் போடுபவர்கள் ஆவார்கள் என்று முத்தமிழ்ப் பேரவையின் 42 ஆம் ஆண்டு இசை விழாவில் உரையாற்றுகையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.7.2023) சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் கலையரங்கில் நடைபெற்ற முத்தமிழ்ப் பேரவையின் 42ஆம் ஆண்டு இசை விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

இந்த இனிய மாலை வேளையில் முத்தமிழ்ப் பேரவையின் 42ஆம் ஆண்டு விழாவிலே கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஆண்டுதோறும் தலைவர் கலைஞர் அவர்களை அழைத்து இந்த விழாவை நடத்துவதுண்டு. அதை வழக்கமாக, வாடிக்கையாக வைத்திருந்தவர் நம்முடைய இயக்குநர் அமிர்தம் அவர்கள். தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவுற்ற பிறகு, ஆண்டுதோறும் என்னை அழைத்து வந்து இந்த நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**கண்டிப்போடு என்னை வளர்த்தவர் இயக்குநர் அமிர்தம்!**

அவர் இந்த நிகழ்ச்சிக்கு தேதி கேட்கிறாரோ இல்லையோ - நான் வழக்கமாக ஆண்டுதோறும் ஒரு தேதியை தருவதென்று முடிவெடுத்து அதை குறித்துக் வைத்துக் கொள்வதுண்டு.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.7.2023) சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் கலையரங்கில் நடைபெற்ற முத்தமிழ்ப் பேரவையின் 42ஆம் ஆண்டு இசைவிழாவில் கலந்து கொண்டு, "இயல் செல்வம்" விருதினை பட்டிமன்றம் புகழ் எஸ். ராஜா அவர்களுக்கும், "இசை செல்வம்" விருதினை திருமதி எஸ். மகதி அவர்களுக்கும், "ராஜரத்னா" விருதினை இஞ்சிக்குடி ஈ.பி. கணேசன் அவர்களுக்கும், "நாட்டிய செல்வம்" விருதினை வழுவூர் எஸ்.பழனியப்பன் அவர்களுக்கும், "வீணை செல்வம்" விருதினை ராஜேஷ் வைத்யா அவர்களுக்கும், "தவில் செல்வம்" விருதினை இடும்பாவனம் கே.எஸ். கண்ணன் அவர்களுக்கும் வழங்கி கௌரவித்தார். உடன் தி இந்து குழுமத்தின் தலைவர் என். ரவி, முத்தமிழ்ப் பேரவையின் தலைவர் ஜி.ராமானுஜம், டாக்டர் சீர்காழி கோ. சிவசிதம்பரம், முத்தமிழ்ப் பேரவை செயலாளர் பி. அமிர்தம், துணைத் தலைவர் குணாநிதி, மற்றும் முத்தமிழ்ப் பேரவை அறக்கட்டளையின் நிர்வாகிகள் உள்ளனர்.

ஏன் என்றால், மதிப்பிற்குரிய இயக்குநர் அமிர்தம் அவர்களிடத்திலே எப்பொழுதும் ஒரு பயம் உண்டு. நான் பல இடங்களிலே இதை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன். அப்பாவிடத்திலே கூட அடி வாங்கியது கிடையாது. அவரிடத்திலே அடி வாங்கியிருக்கிறேன். அதை இன்றைக்கும் மறக்க மாட்டேன். அந்த அளவிற்கு என்னை கண்டிப்போடு வளர்த்தவர் மதிப்பிற்குரிய இயக்குநர் அமிர்தம் அவர்கள். தொடர்ந்து அவர் ஆற்றிவரும் முத்தமிழ்த் தொண்டிலே என்னுடைய பங்களிப்பும் இருக்க வேண்டும் என்ற உணர்வோடு நானும் தவறாமல் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்வதுண்டு. முதன் முதலில் 1975 ஆம் ஆண்டு வழுவூர் இராமையா அவர்களைத் தலைவராகவும், குளிக்கரை பிச்சையா அவர்களைச் செயலாளராகவும், தஞ்சை தியாகராஜன் அவர்களைப் பொருளாளராகவும் இணைத்து உருவாக்கப்பட்டது இந்த முத்தமிழ்ப் பேரவை. இந்தப் பேரவைக்கு இயக்குநர் அமிர்தம் அவர்கள், தற்போது செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார். தலைவராக ஜி.ராமானுஜம் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு செயலாற்றி வருகிறார். தொடர்ந்து இத்தனை ஆண்டு காலமாக இந்தப் பேரவை சிறப்பாகச் செயல்பட்டு வருவது உண்மையிலேயே பாராட்டுக்குரிய ஒன்று. அதற்காக நான் மனந்திறந்து உங்கள் அனைவரின் சார்பிலே அத்தனை பேரையும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்த அமைப்பையும் உருவாக்குவது மிகமிக எளிது. ஆனால் அதை

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# மணிப்பூர் கொடூரம் தொடர்கிறது!

## மேலும் 2 பெண்மணிகள் மீது பாலியல் வன்முறை!

மணிப்பூர், ஜூலை 24 -

மணிப்பூரில் 2 பெண்களுக்கு கொடூரம் நிகழ்த்தப்பட்ட அதே நாளில் அங்கிருந்து 40 கிலோமீட்டர் தொலைவில் மேலும் 2 பெண்கள் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட அதிர்ச்சி தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

மணிப்பூர் மாநிலத்தில் குக்கி பழங்குடியினருக்கும், மைத்தேயி சமூகத்தினருக்கும் இடையே இடஒதுக்கீடு தொடர்பான மோதல் பயங்கர வன்முறையாக வெடித்தது. கடந்த மே மாதம் 3 ஆம் தேதி தொடங்கிய வன்முறையில் இது வரை 150க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மாநிலத்தை விட்டு அண்டை மாநிலங்களில் தஞ்சமடைந்துள்ளனர். மணிப்பூரில் கலவரம் தொடங்கிய நாள் முதல் தொடர்ச்சியாக கூட்டுப் பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நடைபெற்றுள்ள அதிர்ச்சி தகவல் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

ஏற்கனவே இரண்டு பெண்களை நிர்வாணப்படுத்தி வீதியில் ஊர்வலமாக அழைத்து சென்ற வீடியோ சமூக வலைதளங்களில் வெளியான நிலையில் தற்போது மேலும் 2 பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. இம்பாலில் உள்ள கார்வாஷிங் மையம் ஒன்றில் பணியாற்றிய இரண்டு பழங்குடியினப் பெண்களை கும்பல் ஒன்று இழுத்துச் சென்று கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்து, வீதியில் நிர்வாணமாக இழுத்துச் சென்ற அதிர்ச்சி தகவல் தற்போது வெளியாகி உள்ளது. மே 4 ந் தேதி இந்த சம்பவம் நடைபெற்றதாக அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக 2 பெண்கள் உயிரிழப்பு என்ற அளவில் மட்டுமே போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இதேபோல், அதே நாளில் குக்கி சமூகத்தைச் சேர்ந்த வேறொரு பெண்ணும் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு எரித்து கொலை செய்யப்பட்டுள்ளார். அந்த பெண் சடலத்தின் புகைப்படத்தை குக்கி சமூகத்தைச் சேர்ந்த எம்.எல்.ஏக்கள் தற்போது வெளியிட்டுள்ளனர். மே 4 ஆம் தேதி முதல் தொடர்ச்சியாக பாலியல் வன்கொடுமைகள் நடைபெற்று இருக்கலாம் என்று சமூக செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மணிப்பூர் கலவரம் தொடர்பாக இது வரை ஆறு ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

மணிப்பூர் மாநிலத்தில் நிகழ்ந்த வன்முறைக்கு இது வரை 142 பேர் பலியாகி விட்டனர். கிட்டத் தட்ட 60,000 பேர் வீடுகளை இழந்து முகாம்களில் தங்கியுள்ளனர். வன்முறையில் 5000 க்கும் மேற்பட்ட தீ வைப்பு சம்பவங்கள் நடந்துள்ளதாக மாநில அரசே ஒப்புக் கொண்டுள்ளது. ஒரு சின்னஞ் சிறிய மாநிலத்தில் இத்தனை தீ வைப்பு சம்பவங்கள் என்றால் அங்கு அரசு நிர்வாகம் ஒன்று இருக்கிறதா எனக் கேட்க வேண்டியுள்ளது.

சமீபத்தில் உச்சநீதிமன்றத்தில் மாநில அரசு தாக்கல் செய்த அறிக்கையில், வன்முறை தொடர்பாக மொத்தம் 5,995 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 6,745 பேரைப் பிடித்து விசாரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அம்மாநிலத்தில் அமைதி நிலவினாலும் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. எந்தநேரத்திலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்ற நிலையில் பள்ளிகள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள், சந்தைகள் மூடப்பட்டுள்ளன.

இம்மாநிலத்தில் கடந்த மே மாதம் 4ஆம் தேதி இருபெண்களுக்கு இழைக்கப்பட்ட கும்பல் பாலியல் வன்கொடுமை தொடர்பான காணொலி வெளியான பின்னரே மாநில பா.ஜ.க. அரசு அசையத்தொடங்கியது. பிரதமரும் பேசத் தொடங்கினார். சம்பவம் நடந்து 2 மாதங்கள் ஆகியும் காணொலியில் வெளியாகும் வரை யாரையும் கைது செய்யாத அரசு, தற்போது 4 பேரைக் கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் இந்தியாவுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய அவமானத்தைத் தொடர்ந்து எழுந்த நிர்ப்பந்தம் காரணமாகவே குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வளவு நடந்த பின்னரும் மிக மோசமான சம்பவத்தைத் திசை திருப்ப பா.ஜ.க. தேசிய தலைவர்களும் அரசியல் விமர்சகர்கள் என்ற போர்வையில் உலாவும் வலதுசாரிகளும் முயற்சிக்கிறார்கள்.

மே மாதம் நடந்த காணொலி ஏன் இப்போது அதுவும் நாடாளுமன்றம் கூடும்போது வெளியிடப் படுகிறது என்று கேட்கிறார்கள். மணிப்பூர் மாநிலத்தில் கலவரம் தொடங்கியவுடன் இணையத் தொடர்புகளை ஒன்றிய அரசு துண்டித்ததே, அது இவர்களுக்குத் தெரியாதா?





பில்கிஸ் பானுவை பாலியல் வல்லுறவு செய்த குற்றவாளிகளுக்கு சிறை வாசலில் மாலை அணிவித்து வரவேற்பு அளித்தவர்கள், மல்யுத்த வீராங்கனைகளுக்கு எதிராக இழைக்கப்பட்ட பாலியல் கொடுமைக்கு நீதி கேட்காதவர்கள், ஹத்ராஸ் கிராமத்தில் தலித் பெண்ணை வல்லுறவுக்குள்ளாக்கியவர்களை ஆதரித்தவர்கள், உன்னாவ் பாலியல் வன்கொடுமைக்குப் பொறுப்பானவர்கள், உத்தர கண்ட் மாநிலத்தில் ஒட்டல் வரவேற்பாளராக இருந்த அங்கிதா பண்டாரியைக் கொலை செய்தவர்களிடம் நீதி நியாயத்தை எதிர்பார்க்க முடியாது. எனவேதான், மணிப்பூர் சம்பவம் குறித்து யாராவது பேசினால் அலறுகிறார்கள் அல்லது எதிர்க்கேள்வி கேட்கிறார்கள்.

மூச்சுக்கு மூச்சு, பாரத் மாதா கீ ஜே என முழங்குபவர்கள், நாட்டில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள மணிப்பூர் நிகழ்வுகள் மேலும் ஓர் உதாரணம்.

### போலீசார்தான் எங்களை வன்முறைக் கும்பலிடம் ஒப்படைத்தார்கள்!

**மணிப்பூரில் கும்பல் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட இரண்டு பெண்களில் ஒருவருக்கு 20 வயது. மற்றொருவருக்கு 40 வயது. இதில், பாதிக்கப்பட்ட இளம்பெண் பேட்டி ஒன்றை அளித்துள்ளார். அதில், "பட்டப்பகலில் தாங்கள் கொடூரமான முறையில் கும்பல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டோம்" என்று தெரிவித்துள்ளார்.**

**காங்போக்பி மாவட்டத்தில் உள்ள தங்கள் கிராமத்தை ஒரு கும்பல் தாக்கியபோது, அவர்களிடமிருந்து தப்பிப்பதற்காக காட்டிற்குச் சென்றதாகவும், அப்போது, தௌபல் போலீசார் தங்களை மீட்டுக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறோம் என்று கூறி, காவல் நிலையத்திற்கு 2 கி.மீ. முன்னதாக நடுரோட்டில் இறக்கிவிட்டு, வன்முறைக் கும்பலிடம் ஒப்படைத்ததாகவும் அதிர்ச்சித் தகவலை தெரிவித்துள்ளார்.**

**"எங்கள் கிராமத்தைத் தாக்கும் கும்பலுடன் போலீசாரும் இருந்தனர். வீட்டுக்கு அருகிலிருந்து எங்களை சிறிது தூரத்திற்கு அழைத்துச் சென்று, கும்பலுடன் எங்களை சாலையில் விட்டுச் சென்றனர். நாங்கள் போலீசார் மூலமாகவே அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டோம்" என்று குற்றம் சாட்டியுள்ளார்.**